**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

**<u>அசல் வழக்கு எண்.67 /2018</u>**

நாள் 18.08.2022

<u>பெயர். ஆறுமுகம் த/பெ. அழகேசன்</u>

<u>வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்துவிட்ட பிறகு தான் பார்வை குறைபாடு ஏற்பட்டது. நான் வழக்கு தாக்கல் செய்ததில் 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு எந்தவித பொறுப்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் 36 வருடங்களாக அனுபவித்து வருகிறேன் என்பதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் பட்டா கேட்டேன் அவர்கள் தரவில்லை. என் கிரயப்படி பட்டா எதுவும் என் பெயரில் மாறவில்லை என்றால் நான் கேட்டு பார்த்தேன் அவர்கள் கொடுக்கவில்லை. என் கிரய பத்திரத்தில் நான் தவறுதலாக எழுதியதற்கு நான் தான் பொறுப்பு என்றால் சரியல்ல.

2. நானும் மற்ற பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக தவறான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் ஆவணப்படி வருவாய் அதிகாரிகளால் பட்டா மாற்றம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எனது அனுபவ உரிமை மூலமாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் கிரயப்படி கிரயம் மூலமாக உரிமை கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஓம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.